**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2188/ஆ5/2023, நாள்.14.11.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – சிறார் மற்றும் ஆசிரியர் இதழ்கள் – நவம்பர் மாத தேன்சிட்டு மற்றும் புது ஊஞ்சல் இதழ்கள் குழந்தைகள் தினக் கொண்டாட்டம் – அனைத்துப் பக்கங்களிலும் மாணவப் படைப்பாளிகளின் படைப்புகள் – ஒவ்வொருவருக்கும் இதழ் அனுப்புதல் – காலை வணக்கக் கூட்டத்தில் பாராட்டி நேரில் வழங்குதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 108, பள்ளிக்கல்வித் (பக5(1) துறை நாள். 22.06.2022
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.19538/எம்/இ2/2022, நாள். .11.2023

•••••

பார்வையில் காணும் அரசாணை மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, பள்ளிக்கல்வி துறையின் வாயிலாக ஜனவரி 2023 முதல் 6–9ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்காக "தேன்சிட்டு" இதழ் அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளுக்கும் வகுப்பறைக்கு ஒன்று என்ற முறையிலும் ஆசிரியர்களுக்காக "கனவு ஆசிரியர்" இதழ் பள்ளிக்கு ஒன்று என்ற விதத்திலும் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் அஞ்சல் வழியாக அனுப்பப்பட்டு வருகிறது.

இதே போன்று, ஜூன் 2023 முதல் 4&5 வகுப்பு மாணாக்கருக்காக "புது ஊஞ்சல்" இதழ் அனைத்து அரசு தொடக்க . நடுநிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைக்கு ஒன்று என்ற வகையில் அனுப்பப்பட்டு வருகிறது. இதுவரை சிறார் மற்றும் ஆசிரியர் இதழ்களில் அரசுப் பள்ளி மாணவர்களின் ஓவியங்கள், கவிதைகள், கதைகள், கட்டுரைகள் உள்ளிட்ட படைப்புகள் ஒரு பகுதியாக இடம் பெற்று வந்தன.

தற்போது, குழந்தைகள் தினம் முன்னிட்டு தேன்சிட்டு மற்றும் புது ஊஞ்சல் இதழ்களில் மொத்தமுள்ள தலா 24 பக்கங்களிலும் 104 அரசுப் பள்ளி மாணவர்களின் படைப்புகளே இடம் பெற்றிருக்கின்றன. வரும் 16 நவம்பர் தேன்சிட்டு மற்றும் புது ஊஞ்சல் இதழ்களிலும் அரசுப் பள்ளி மாணவர்களின் படைப்புகளையே முழுமையாக இடம்பெற வைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சி பள்ளிக்கல்வியில் மட்டுமின்றி பத்திரிகை உலகிலும் புதுமையான முயற்சியாகக் கவனம் பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து, வழக்கம் போன்று, மாணவப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அம்மாணவர் பெயரில் அவர்களின் படைப்புகளை இடம் பெற்று இருக்கும் இதழ்கள் ஒவ்வொரு முறையும் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுவருகிறது. அதேபோன்று, நவம்பர் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில் பள்ளிகளை வந்தடையும் மாணவர் பெயருள்ள இதழ்களை பள்ளியில் நடைபெறும் காலை வணக்கக் கூட்டத்தில் அனைவர் முன்னிலையிலும் அம்மாணவரை அறிமுகப்படுத்திப் பாராட்டி அவருக்கு வழங்கப்பட்டுள்ள இதழை அளித்திடுமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்.
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி )
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)